**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY OF M/S. JCK MINES OVER AN EXTENT OF 7.44.0 HECTARE LOCATED IN S.F. NOs. 98/2, 98/3, 98/4, 98/7, 100/1, 100/2, 101/2, 101/3. 101/4, 105/1, 105/3, 105/7, 105/8 AND 105/11 OF MELNARMA VILLAGE, CHEYYAR TALUK & TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 01.08.2025 AT 11:00 AM IN M/S. SRI PUGAZH AADHAVAN MAHAL, MELMA KOOT-ROAD, CHEYYAR TALUK & TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. Siva | Revenue Divisional Officer (Full Additional Charge),<br>Cheyyar,<br>Tiruvannamalai District. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 3. | Dr. S. Sugashini | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 4. | Er. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 5. | Thiru. N. Ashok Kumar | Tahsildar,<br>Cheyyar,<br>Tiruvannamalai District. |
| 6. | Thiru. M. Rajesh | Deputy Tahsildar,<br>Cheyyar,<br>Tiruvannamalai District. |
| 7. | Public and NGOs | 83 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai welcomed the Revenue Divisional Officer (Full Additional Charge), Cheyyar who presided over the public hearing meeting, other Government officials, the public & the NGOs on behalf of the TNPC Board and explained the need for conduction of Public Hearing as a requisite for issue of Environmental Clearance for the proposed Rough stone & gravel quarry as follows:

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. JCK Mines over an extent of 7.44.0 hectare in Melnarma

Village, Cheyyar Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA) as per the Environmental Impact Assessment Notification 2006.

As per EIA Notification 2006 and its subsequent amendments, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectare requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notices for this public hearing were published in dailies of "The New Indian Express" (English) & "Daily Thanthi" (Tamil) on 16.07.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone and gravel quarry of M/s. JCK Mines which is to be conducted at M/s. Sri Pugazh Aadhavan Mahal on 01.08.2025 @ 11.00 AM."

The District Environmental Engineer further stated that "The project proponent will explain the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details through power point presentation. Following the presentation, the general public and NGOs can express their views, suggestions and comments on the said project one by one either in oral or in written format during when the public should start by stating their name and their village name. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the authority will consider the issue of Environmental Clearance to this proposed quarry. The Revenue Divisional Officer, Cheyyar will inaugurate the public hearing meeting thereafter the project proponent will explain the Environmental Impact Assessment Study report."

The Revenue Divisional Officer, Cheyyar requested the project proponent to explain about the proposed Rough stone and gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail and addressed the general public to mention their name and

their village name before expressing their views, suggestions and comments on the said project.

On behalf of the project proponent, Thiru. G. Bala Subramani, Coordinator, M/s. Global Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone quarry of M/s. JCK Mines) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Subsequently, the Revenue Divisional Officer, Cheyyar requested the public to express their views/suggestions/comments in oral or written statements one by one.

The following are the views/suggestions/comments represented by the public:

**1. Thiru. Sathish, Melnarma Village.**

He stated that, "We have no objections to this quarry getting established here. It will give employment opportunities for everyone. Earlier, we used to go elsewhere for work, and so if the quarry is coming nearby, then it will be easier for us to commute from home. We have no objections to this quarry coming here." and concluded his speech by expressing his support for the proposed quarry.

**2. Thiru. Vinoth Kumar, Paiyur Panchayat.**

He said, “We have no objections to this quarry getting established here. If this quarry comes, 50 families will survive in our village. Employment will be provided. We have no problem to this quarry coming here. There is no harm to the environment. I have no objection to this quarry coming here” and concluded his speech by expressing his support.

**3. Tmt. Banupriya Jeyaraman, Paiyur Village.**

She addressed “I have no issues with the establishment of this quarry. Our village lacks adequate bus facilities, which makes it difficult for our villagers to commute to work elsewhere. Therefore, I request the

management to provide maximum employment opportunities to the people of Paiyur Panchayat" and concluded by supporting the proposed quarry.

**4. Thiru. Sunantha Reddy, Environmentalist:**

He stated that, "My best wishes to management and of the same time to the villagers. I am the first Environmentalist to support the Industrial developers. In my opinion, unemployment is the first pollution to the country. In India, around 5 to 6 lakh jobs are being provided by the Central Government and all the State Governments included. Every year one crore people are coming out for employment. 95 Lakhs people depend only on Industrial sector for providing direct employment. I recommend unconditional approval for this proposed rough stone & gravel quarry."

"Planting of trees has been recommended in this scheme. I recommend planting of fruit bearing and medicinal plants. Also, Rain water harvesting is important. I also request to provide Rain water harvesting facilities so as to improve the groundwater in this area. Give priority to employment opportunities for the local people. I request you to provide skill development to the youth with the help of the government. I recommend to organize a skill development project for unemployed youth from your CSR funds."

"Finally, I recommend the committee members to give unconditional approval to this Quarry" and concluded his speech by expressing approval for the quarry project.

**5. Thiru. Sathish, Environmentalist:**

He said that, "I respect your sentiments, customs, culture, and traditions, and I acknowledge your noble thoughts. I accept your justified concerns and issues with a unified mindset. To address your problems immediately, I humbly request the high-level government officials to create sustainable development and provide immediate employment opportunities. I request that permanent housing be provided to the nearby villages. I also request the environmental protection authorities to ensure this village remains environmentally sound and green. I urge the rightful owners to

plant and conserve trees. Let the trees be planted and be protected. I humbly request the high-level Government officials to grant environmental clearance without imposing any restrictions to the proponent." and concluded by supporting this proposed quarry.

**6.Thiru. Muni Krishnan, NGO, Tirupati:**

He stated that, "Today I am happy to participate in this meeting because no controversial matter has been raised in this meeting. Wherever this type of industry is started, some pollution will create and I request the proponent to do some environmental development activity in this surrounding village. First, drinking water is the major problem. So, I request the proponent to arrange safe drinking water tank in the surrounding villages. Next Green Belt development, that is very important. The Air pollution from the industry will be attenuated only by the trees. So, plant at least 3000 to 4000 saplings in the surrounding villages and Government lands. Third is education development. By providing educational books and playgrounds to the schools may develop education. Fourth is Industry income. It is very important to the development of the country. So, I request the Government to give Environmental clearance to this Industry." and concluded his speech by expressing his support for the establishment of the quarry.

**7. Thiru. Venkat Subbaih, NGO:**

He stated that, "This project is proposed because industrial development is necessary. I request to provide job opportunities to the unemployment youth in the affected villages. A medical camp should be organized once in every three months in the villages. Requesting the management to involve the people of the surrounding villages and address their problems. I request the M/s. JCK Mines to be issued with Environmental Clearance from Tamil Nadu Pollution Control Board and Ministry of Environment Forest and Climate Change" and **he concluded by expressing support for the proposed quarry's establishment.**

**8. Thiru. Akkalaya, NGO:**

He requested the proponent of JCK mines to provide Green belt and libraries to the villages and supported the project by requesting the Government to issue Environmental Clearance. **Finally, he concluded by expressing support for the quarry's establishment.**

**9. Thiru. Subramaniam, Andhra Pradesh:**

He said, "Rough Stone and Gravel are most important materials in construction and infrastructure sector. That's why I request the Tamil Nadu Pollution Control Board for early issue of Environmental Clearance to this project as early as possible."

**10.Thiru. Janame Jeyam, Paiyur Village:**

He said, "It will be better and more beneficial for us if this JCK quarry gets established here. We have no objection to this quarry coming here." He concluded by expressing support for the quarry establishment.

**11.Thiru. Krishnamoorthy, Paiyur Village:**

He said, "We will not be affected by the establishment of this quarry. I request you to provide employment to the village people." He concluded by expressing support for the quarry's presence.

**12.Thiru. G. Annadurai, Thuraiyur Village:**

He said, "There's no problem with this quarry coming here; it's beneficial in every way." He concluded by expressing support for the quarry's establishment.

**13.Thiru. Subburaiyan, Tirupati:**

He said, "I request to provide purified drinking water to nearby villages and books shall be given to school children." Additionally, he emphasized that trees should be planted. He concluded by expressing support for the quarry's establishment.

**14.Thiru. Prakash, Ranipet:**

He said, "Water is crucial," and expressed opposition to illegal mining of sand. As he was making irrelevant comments not pertaining to this proposed quarry subject, the District Environmental Engineer requested that he confine his comments to the project at hand. However, he neither expressed support for the project nor any objection to the project and didn't post any further comment.

**15.Thiru. Arumugam, Paiyur Village:**

He said, "If M-Sand factory comes near our village, construction work can be done easily. If this quarry comes here, then we will get jobs as drivers and helpers and thus 50 families will survive." He concluded by expressing support for the quarry's presence.

**The following 33 nos. of the public have expressed their opinion in writing on the proposal of this rough stone and gravel quarry. All the 33 nos. have expressed their support to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Thiru. S. Muni Krishna, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 2. | Thiru. S. Venkata Subbaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Thiru. A. Subramanyam, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. K. Sathish, Krishnagiri. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Tmt. S. Fathima, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Thiru. S. Narasimmahlu, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 7. | Tmt. Aakkalaiahh Doti, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 8. | Thiru. T. Anil Reddy, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 9. | Thiru. A. Venkata Subbiah, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 10. | Thiru. Katta Yadagiri, Telangana. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 11. | Thiru. Inbasekaran,<br>Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 12. | Thiru. G. Nokiamani,<br>Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 13. | Thiru. Naveen Kumar Palle,<br>Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 14. | Thiru. D. Malardavan,<br>Chennai. | Expressed support in favour of the proposed quarry |
| 15. | Thiru. V. Manikandan,<br>Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 16. | Thiru. K. Seenuvasan,<br>Pudhukottai. | Expressed support in favour of the proposed quarry |
| 17. | Thiru. B. Subbaramaiah,<br>Tirupati. | Expressed support in favour of the proposed quarry |
| 18. | Thiru. V. Suresh,<br>Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 19. | Thiru. M. Sivanathan,<br>Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 20. | Thiru. P. Muthukumaran,<br>Cuddalore. | Expressed support in favour of the proposed quarry |
| 21. | Thiru. A.P. Rajendiran,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 22. | Thiru. Geetha Vijayaraman,<br>Trichy. | Expressed support in favour of the proposed quarry |
| 23. | Thiru. Muthu Raja,<br>Ramnad. | Expressed support in favour of the proposed quarry |
| 24. | Thiru. T. Elango,<br>Cheyyar. | Expressed support in favour of the proposed quarry |
| 25. | Thiru. V. Arumugam,<br>Cheyyar. | Expressed support in favour of the proposed quarry |
| 26. | Thiru. V. Krishnamoorthy,<br>Cheyyar. | Expressed support in favour of the proposed quarry |
| 27. | Thiru. R. Narayanan,<br>Cheyyar. | Expressed support in favour of the proposed quarry |
| 28. | Thiru. K. Sekar,<br>Cheyyar. | Expressed support in favour of the proposed quarry |
| 29. | Thiru. R. Vinoth Kumar,<br>Cheyyar. | Expressed support in favour of the proposed quarry |
| 30. | Thiru. Janame Jeyam,<br>Melma, Tiruvannamalai. | Expressed support in favour of the proposed quarry |
| 31. | Thiru. T. Sudhakar,<br>Tirupati. | Expressed support in favour of the proposed quarry |
| 32. | Thiru. Venkatesh boya,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 33. | Thiru. Sunantha Reddy,<br>Telungana | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Cheyyar announced that the meeting had come to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 16.07.2025 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (13 pages/83 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting – 33 nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

11.8.25
**Revenue Divisional Officer(FAC),**
**Cheyyar.**

(5/6)

**திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், மேல்நர்மா கிராமத்தில் புல எண்கள். 98/2, 98/3, 98/4, 98/7, 100/1, 100/2, 101/2, 101/3. 101/4, 105/1, 105/3, 105/7, 105/8 & 105/11-ல் 7.44.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். JCK மைன்ஸ் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 01.08.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், காஞ்சிபுரம் – வந்தவாசி சாலை, மேல்மா கூட்ரோட்டில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ புகழ் ஆதவன் மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சீ. சிவா | வருவாய் கோட்ட அலுவலர்<br>(முழு கூடுதல் பொறுப்பு),<br>செய்யாறு,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 3. | திருமதி. சி. சுகாஷினி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 5. | திரு. ந. அசோக் குமார் | வட்டாட்சியர்,<br>செய்யாறு,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 6. | திரு. மு. ராஜேஷ் | துணை வட்டாட்சியர்,<br>செய்யாறு,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 7. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (83 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும்,

பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், மேல்நர்மா கிராமத்தில், 7.44.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். JCK மைன்ஸ் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006–ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். குகன் மைன்ஸ் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். ஸ்ரீ புகழ் ஆதவன் மஹாலில் 01.08.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பரஸ் செய்தி தாள்களில் 16.07.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள்

பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. ஜி. பால சுப்பரமணி, ஒருங்கிணைப்பாளர், தி/ள். குளோபல் மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் (தி/ள். JCK மைன்ஸ் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. சதீஷ், மேல்நர்மா கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த குவாரி இங்கு வருவதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இதனால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கின்றது. முன்பு, நாங்கள் வேலைக்காக வெளி இடங்களுக்குச்

செல்வோம், தற்போது இந்த குவாரி அமையும் பட்சத்தில், வீட்டிலிருந்து பயணம் செய்வது எங்களுக்கு எளிதாக இருக்கும். இந்த குவாரி இங்கு வருவதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்

**<u>2. திரு. வினோத் குமார், பையூர் பஞ்சாயத்து.</u>**

இவர் கூறுகையில்," இந்த குவாரி வருவதில் ஆட்சேபனை இல்லை. இந்த குவாரி வந்தால் எங்கள் ஊரில் 50 குடும்பங்கள் பிழைக்கும். வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த குவாரி வருவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. சுற்றுச்சூழலுக்கும் எந்த பாதிப்பும் இல்லை. இந்த குவாரி வருவதால் ஆட்சேபனை இல்லை" என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>3. திருமதி. பானுபிரியா ஜெயராமன், பையூர் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "எனக்கு இந்த குவாரி அமைவதால் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. எங்கள் ஊரில் போதிய பேருந்து வசதி இல்லை. அதனால் எங்கள் ஊரில் உள்ளவர்கள் வெளியில் சென்று வேலை பார்க்க முடியவில்லை. ஆகையால் பையூர் பஞ்சாயத்தில் உள்ளவர்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு தருமாறு நிர்வாகத்திடம் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>4. திரு. சுனந்தா ரெட்டி, சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்.</u>**

இவர் கூறுகையில், "நிர்வாகத்திற்கும் அதே நேரத்தில் கிராம மக்களுக்கும் எனது வாழ்த்துக்கள். தொழில்துறை மேம்பாட்டாளர்களை ஆதரிக்கும் முதல் சுற்றுச்சூழல் ஆர்வலர் நான். என் கருத்துப்படி, வேலையின்மை தான் நாட்டிற்கு முதல் மாசுபாடு. இந்தியாவில் ஆண்டிற்கு அனைத்து மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசு உட்பட 5 முதல் 6 லட்சம் வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி மக்கள் வேலைவாய்ப்புக்காக வெளியே வருகிறார்கள். 95 லட்சம் பேர் நேரடி வேலைவாய்ப்பை பெறுவதற்காக தொழிற்சாலைகளை மட்டுமே நம்பியுள்ளனர். இந்த குவாரிக்கு நிபந்தனையற்ற அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்"

"மரம் நடுவதற்கு இத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பழம்தரும், மருத்துவ குணமிக்க மரக்கன்றுகள் நடுவதற்கு நான் பரிந்துரைக்கிறேன். மேலும் மழைநீர் சேகரிப்பு முக்கியமானது. இந்தப் பகுதியில் நீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீரை மேம்படுத்தவும் கேட்டுக்கொள்கிறேன். உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கு முன்னுரிமை கொடுங்கள். அரசாங்கத்தின் உதவியுடன் இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு வழங்க கேட்டுக்கொள்கிறேன். உங்கள் CSIR நிதியிலிருந்து வேலையற்ற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டம் நடத்தப் பரிந்துரைக்கிறேன்.."

இறுதியாக, நிர்வாகத்திற்கு நிபந்தனையற்ற சுற்றுச்சூழல் அனுமதியை வழங்க குழு உறுப்பினர்களை நான் பரிந்துரைக்கிறேன்." என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>5. திரு. சதீஷ், சுற்றுச்சூழல் காப்பாளர்.</u>**

இவர் கூறுகையில், "உங்களது ஆச்சார விவரங்கள் கலாச்சாரம் சம்பிரதாயங்களை காப்பாற்றி கொண்டு உங்கள் மனோபாவங்களை மதிக்கிறேன். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்துவைக்க அரசாங்கத்திடம் நிலையான வளர்ச்சியை உருவாக்குவதற்கு உடனடியாக வேலை வாய்ப்பினை ஏற்பாடு செய்ய வேண்டும். அருகில் உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகள் கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர் நிலை அதிகாரிகளை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஊர் சுற்றுச்சூழல் மற்றும் பசுமையுடன் இருக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் காப்பாற்று செயலாளர்களை கேட்டுக்கொள்கிறேன். குவாரி உரிமையானவர்களை மரம் வளர்க்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன் மரங்கள் வளருங்கள். அவற்றை காப்பாற்றுங்கள். உரிமையாளர் அவர்களுக்கு எந்த ஒரு கட்டுப்பாட்டை விதிக்காமல் சுற்றுச்சூழல் அனுமதியை உடனடியாக கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. முனி கிருஷ்ணன், சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில், "இன்று இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், ஏனென்றால் இந்தக் கூட்டத்தில் எந்த சர்ச்சைக்குரிய விஷயமும் இல்லை. இந்த வகையான தொழில் எங்கெல்லாம் தொடங்குகிறதோ, அங்கெல்லாம் மாசுபாடு ஏற்படும். சுற்றியுள்ள கிராமத்தில் சில சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் குவாரி உரிமையாளரிடம் கேட்டுக்கொள்கிறேன். முதலில் பாதுகாப்பான குடிநீர் தான் பிரச்சனை. எனவே, சுற்றியுள்ள கிராமங்களில் பாதுகாப்பான குடிநீர் தொட்டி கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு நான் குவாரி உரிமையாளரிடம் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பசுமை வளையம் மேம்பாடு, அது மிகவும் முக்கியமானது. இத்தொழிலின் இயக்கத்தினால் உண்டாகும் காற்று மாசு, மரங்களால் மட்டுமே தடுக்கப்படுகிறது. எனவே, சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் அரசு இடங்களில் குறைந்தது 3000 முதல் 4000 மரக்கன்றுகளை நடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது கல்வி மேம்பாடு. 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு புத்தகங்கள் வழங்குதல் மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்தல் போன்ற உதவிகள் புரியலாம். நான்காவது தொழில்துறை வளர்ச்சி. நாட்டின் வளர்ச்சிக்கு இது மிகவும் முக்கியமானது. எனவே இந்தத் தொழிலுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்" என குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. வெங்கட சுப்பய்யா, சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில், "தொழில்துறை மேம்பாடு அவசியம் என்பதால் இந்த திட்டத்தை ஊக்குவிக்கிறேன். இத்திட்டத்தினால் பாதிக்கப்படும் கிராமங்களில் வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இக்கிராமங்களில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். சுற்றியுள்ள கிராம மக்களை இதில் ஈடுபடுத்தி அவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய நிர்வாகத்தை கேட்டுக்கொள்கிறேன். JCK மைன்ஸ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து

சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**8. திரு. அக்காலயா, சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில், "கிராமங்களுக்கு பசுமை வளையம் மற்றும் நூலகம் அமைக்குமாறு JCK மைன்ஸ் உரிமையாளர்களை கேட்டுக்கொண்டு, சுற்றுச்சூழல் அனுமதி வழங்க திட்டத்திற்கு ஆதரவளிப்பதாகவும்" கூறி குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. சுப்ரமணியம், ஆந்திரபிரதேஷ்.**

இவர் கூறுகையில், "கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பிற்கு சாதாரண கல் மற்றும் கிராவல் மிக முக்கியமான பொருட்களாகும். அதனால்தான் இந்தத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை விரைவில் வழங்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக்கொள்கிறேன்" என்று குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**10. திரு. R. ஜனமே ஜெயம், பையூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த JCK குவாரி வருவது எங்களுக்கு சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். இந்த குவாரி வருவதால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை" என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்

**11. திரு. கிருஷ்ணமூர்த்தி, பையூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "கல்குவாரி அமைப்பதால் எந்த குறைப்பாடும் இல்லை. வேலைவாய்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**12. திரு. G. அண்ணாதுரை, துறையூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த குவாரி வருவதால் எந்த பிரச்சனையும் இல்லை, எல்லா வகையிலும் நன்மை தான்." என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**13. திரு. சுப்புராயன், திருப்பதி, சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில், "அருகில் உள்ள கிராமங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்க வேண்டும் என்றார். மேலும் மரங்கள் நட வேண்டும்" என்று கூறி **தனது ஆதரவை JCK மைன்ஸ்க்கு வழங்குவதாக தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**14. திரு. பிராகாஷ், ராணிப்பேட்டை.**

இவர் கூறுகையில், "தண்ணீர் முக்கியம் என்றார், செயற்கை மணல் வேண்டாம் என்றார். உடைத்த பாறையில் தண்ணீர் நிறைய இருக்கிறது போன்ற இத்திட்டத்திற்கு சம்மந்தம் இல்லாத கருத்துக்களை பதிவிட்டமையால், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இத்திட்டம் குறித்த கருத்துக்களை மட்டுமே பதிவிடுமாறு இவரிடம் கேட்டுக்கொண்டார். ஆனால் இவர் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தோ ஆட்சேபனை தெரிவித்தோ எவ்விதமான கருத்துக்களையும் பதிவிட இல்லை.

**15. திரு. ஆறுமுகம், பையூர் கிராமம்.**

இவர் கூறுகையில், "M–Sand தொழிற்சாலை எங்கள் ஊருக்கு அருகில் வந்தால் கட்டுமானத் வேலை எளிதாகச் செய்ய முடியும். ஓட்டுநர், உதவியாளர் போன்ற வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் அதனால் 50 குடும்பங்கள் பிழைக்கும் என்றும் இந்த குவாரி வரவேண்டும்" என்று கூறி **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 33 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 33 நபர்களும் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| **வ. எண்** | **பெயர் மற்றும் ஊர்** | **கருத்து** |
|---|---|---|
| 1. | திரு. எஸ். முனி கிருஷ்ணன்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2. | திரு. எஸ். வெங்கட சுப்பையா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திரு. ஏ. சுப்ரமணியம்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 4. | திரு. கே. சதீஷ், கிருஷ்ணகிரி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திருமதி. எஸ். பார்த்திமா, ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திரு. எஸ். நரசிம்ம லு, ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | திருமதி. அக்காலயா டொட்டி, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திரு. டி. அனில் ரெட்டி, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. ஏ வெங்கட சுப்பையா, ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10. | திரு. கட்டையாதா கிரி, தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11. | திரு. த. சே. இன்பசேகரன், ராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12. | திரு. ஜி. நோக்கியா மணி, ராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 13. | திரு. டி. மலர் தேவன், சென்னை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 14. | திரு. நவீன் குமார், தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 15. | திரு. வி. மணிகண்டன், விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 16. | திரு. கே. சீனிவாசன், புதுக்கோட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 17. | திரு. பி. சுப்ரமய்யா, திருப்பதி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 18. | திரு. வி. சுரேஷ், விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 19. | திரு. எம். சிவநாதன், விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 20. | திரு. பி. முத்துக்குமரன், கடலூர். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 21. | திரு. ஏ. பி. ராஜேந்திரன்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 22. | திருமதி. வி. கீதா விஜயராமன்,<br>திருச்சிராப்பள்ளி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 23. | திரு. எம். முத்துராஜா, ராம்நாத். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 24. | திரு. டி. இளங்கோ, செய்யார். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 25. | திரு. வி. ஆறுமுகம், செய்யார். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 26. | திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, செய்யார். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 27. | திரு. ஆர். நாராயணன், செய்யார். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 28. | திரு. கே. சேகர், செய்யார். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 29. | திரு. வினோத்குமார், செய்யார். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 30. | திரு. ஜனமே ஜெயம், மேல்மா கிராமம்,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 31. | திரு. டி. சுதாகர், திருப்பதி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 32. | திரு. வெங்கடேஷ் பையா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 33. | திரு. சுனந்தா ரெட்டி, தெலுங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட

சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 16.07.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (13 பக்கங்கள்/83 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 33 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

11.8.25

**வருவாய் கோட்ட அலுவலர் (முகூபொ),**
**செய்யாறு.**

(3/6)